2021 பிப்ரவரி 26] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

துணையாக, பக்கபலமாக, பாதுகாப்பாக இருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

இந்தப் பேரவையில் கொடுக்கப்படுகிற உறுதிமொழிகள் செயல்படுத்தப்படுகின்றனவா என்று, இந்த ஆட்சி செங்கோலை ஒவ்வொரு பகுதிக்கும் தூக்கிச் சென்று, அங்கிருக்கிற அதிகாரிகளை ஆய்வு செய்து, அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றனவா, உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று ஆய்வு செய்கிற ஒரு பெரும் பணியை எனக்குத் தந்து, அந்தப் பெரும் பணியை 3 ஆண்டுகளில் சிறப்பாக நிறைவேற்றுகிற வேலையில் எனக்கு ஒத்துழைப்பு தந்து, என்னை நியமித்த பேரவைத் தலைவராகவும், இந்த ஆட்சி மண்டபத்தின் சாரதியாகவும் இருக்கிற பேரவைத் தலைவரே, உங்களை வணங்குகிறேன்.

இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கிட பரிந்துரை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் மீண்டும் வணங்கி, பேரவைச் செயலாளர் அவர்களையும், நான் செல்கின்ற இடமெல்லாம் எனக்கு அறிவுரைகளைத் தந்து, பாதுகாப்பாக இருந்து என்னை வழிநடத்திய உறுதிமொழிக் குழுவின் அங்கத்தினர்கள், அலுவலர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 79–வது முதல் 85–வது வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக உவகையோடு இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12–05

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.